Cambridge International Education

# Cambridge O Level

**TAMIL** **3226/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2026**

INSERT **1 hour 30 minutes**

*0062349912-I*

**INFORMATION**
- This insert contains the reading passage.
- You may annotate this insert and use the blank spaces for planning. **Do not write your answers** on the insert.

This document has **4** pages. Any blank pages are indicated.

NL 360388/3

© Cambridge University Press & Assessment 2026

[Turn over

https://xtremepape.rs/

Read the following passage carefully and then answer, briefly and in **Tamil**, **Questions 3–10** on the Question Paper.

விமலாவுக்கு நாற்பதாவது பிறந்த தினம் அடுத்த மாதம் வரவுள்ளதால், அவளது கணவன் ரவியும் மகனும் மகளுமாக அவளுக்குத் தெரியாமல் பிறந்தநாள் விழாவொன்றை இல்லத்தில் ஆயத்தம் செய்ய விரும்பினார்கள். எந்த விதத்திலும் தாம் ஒழுங்கு செய்யும் பிறந்தநாள் விழாவைப் பற்றி விமலாவுக்குத் தெரியவரக் கூடாது என்பதிலே அவர்கள் கவனமாக இருந்தார்கள்.

பொதுவாக வீட்டில் அனைத்து வேலைகளையும் விமலாதான் செய்வதுண்டு. ரவி தனது அலுவலக வேலைகளோடு நேரம் செலவழித்த பின்னர் வீட்டுக்கு வரும்போது இருட்டிவிடும். அதன் பின்னர் விமலா கொடுக்கும் இரவு உணவை உண்ட பின்னர் சிறிது நேரம் தொலைக்காட்சி பார்த்துவிட்டு படுக்கச் செல்வது அவனது வழமை. பாடசாலையால் வந்த பின்னர் பிள்ளைகள் இருவரும் பாடசாலையில் தரப்பட்ட வீட்டுப் பாடங்களை முதலில் செய்வார்கள். பின்னர் சிறிது நேரம் சமூக வலைத்தளங்களில் நேரம் செலவழித்துவிட்டு படுக்கச் செல்வது வழமையாக இருந்தது. யாருக்கும் எந்த வீட்டு வேலைக்கான பொறுப்புகளையும் விமலா கொடுக்காது தன் கையே தனக்குதவி என்று தனியாக இல்லத்தை அழகாகப் பராமரிப்பாள்.

ஆனால் விமலாவின் பிறந்த நாள் விழாவுக்காக அனைத்து வேலைகளையும் மூவருமாகச் செய்து அவளை ஆச்சரியப்பட வைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது. மூவருக்கும் தாம் செய்யவுள்ள செயல் பற்றி மிகுந்த பெருமையும் உற்சாகமும் இருந்தது. அனைவருக்கும் அழைப்பு விடுக்கும் பொறுப்பை ரவி எடுத்துக்கொண்டான். உணவைப் புகழ் வாய்ந்த உணவகமொன்றிலிருந்து வரவழைக்கும் பொறுப்பை மகன் எடுத்துக்கொண்டான். விழாவுக்கென வீட்டைத் தயார்ப்படுத்தும் பொறுப்பை மகள் எடுத்துக்கொண்டாள்.

உறவினர்களுக்கு அழைப்பு விடுக்கும் வேலைகளை உடனே ரவி ஆரம்பித்தான். ஆனால் அது இலகுவான விடயமாக இருக்கவில்லை. அலுவலகத்திலிருந்து வீட்டைப் பற்றிச் சிந்திக்க அவனுக்கு நேரம் இருக்கவில்லை. ரவி வீட்டில் இருந்த நேரமெல்லாம் விமலாவும் வீட்டில் இருந்தாள். ரவியின் மனதில் ஏதோ அமைதியின்மை இருப்பதை அவனது முகத்திலிருந்து விமலா உணர்ந்துகொண்டாள். ஒருநாள் ரவி கணினியைத் திறந்து வைத்துவிட்டு தண்ணீர் குடிக்கச் சென்றான். அப்போது அதனருகில் சென்ற விமலா, தனது பெயர் மின்னஞ்சலில் இருப்பதைப் பார்த்துவிட்டு அதனை வாசித்தாள். இதனால் ரவியின் திட்டம் அவளுக்குத் தெரிய வந்தது. புன்முறுவலோடு எதுவும் தெரியாததுபோல் அந்த இடத்தைவிட்டு அவள் நகர்ந்தாள்.



https://xtremepape.rs/

வீட்டில் என்ன பொருள் எங்கு உள்ளது என்பது தெரியாத மகளுக்கு வீட்டைப் பிறந்தநாள் விழாவுக்கென்று தயார் செய்வது சிரமமாக இருந்தது. தான் தாயாருக்கு எந்த விதத்திலும் உதவாததை உணர்ந்து வெட்கமும் சங்கடமும் அவளுக்கு ஏற்பட்டது. அவளது தாயாரின் உதவியில்லாது தன்னால் எதையும் வீட்டில் செய்ய முடியாது என்பதை அப்போதுதான் மகள் உணர்ந்து கொண்டாள்.

விமலாவின் மகன் எந்தச் சிரமமும் இல்லாது உணவுக்கான ஒழுங்குகளைச் செய்தான். பிறந்தநாள் கேக்கின் நிறம் ஊதா என்றும், அதன் வடிவமைப்பு அன்னப்பறவை என்றும், அதன் அளவு இரண்டு தட்டுகள் கொண்டது என்றும் மூவருமாக முடிவெடுத்தார்கள். ஆனால் அவர்கள் மூவரும் இல்லாத சமயத்தில் கேக்கைத் தயாரிப்பவர்கள் கேக்கை வீட்டில் விநியோகம் செய்தார்கள்.

இறுதியில் மூவருமாக விமலாவிற்கு தாம் ஒழுங்குசெய்யும் பிறந்தநாள் விழாவைப் பற்றிய உண்மையைக் கூறினார்கள். இல்லத்தை நிர்வகிக்கும் பெண்ணை, இல்லத்தின் தலைவியை ‘இல்லத்தரசி’ என்று சும்மாவா சொன்னார்கள்? இல்லத்துக்காகப் பாடுபடும் அவளுக்குத் தெரியாமல் அணுவும் அசையாது என்பதை ரவியும் பிள்ளைகளும் உணர்ந்தார்கள்.



https://xtremepape.rs/

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (Cambridge University Press & Assessment) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in our Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge International Education is the name of our awarding body and a part of Cambridge University Press & Assessment, which is a department of the University of Cambridge.

© Cambridge University Press & Assessment 2026


https://xtremepape.rs/